

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு இளைஞர் அணி சார்பாக நடைபெற்ற என் உயிரினும் மேலான மாபெரும் பேச்சுப்போட்டி இறுதிப் போட்டியில் பங்கேற்று இளம் தலைமைக் கழக பேச்சாளர்களாக தேர்வு பெற்ற மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 9 பேர் மதுரை வடக்கு மாவட்ட செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தியை, இளைஞர் அணி மாநில துணை செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா ஏ.என்.ரகு ஆலோசனையின் பேரில், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் இளங்கோவன் தலைமையில் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் குமரேசன், வெற்றிச்செல்வன், வன்னி முத்துப்பாண்டி, மருதுராஜா, மாவட்ட பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, சிறைச்செல்வன், ஹக்கீம், மதிவாணன் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.



கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற, கோயம்புத்தூர் மாவட்ட வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீட்டு நிகழ்வில், “வரைவு வாக்காளர் பட்டியலை”, கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி வெளியிட்டார். கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, மாநகர் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆர்.கே.சுரேஷ் குமார், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### பசும்பொன் செல்லும் வழியில் முதல்வருக்கு

# சிவகங்கை மாவட்டம்-திருப்புவனம்-மானாமதுரையில் உற்சாக வரவேற்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமை

சிவகங்கை, அக். 31-

தமிழக முதல்வர் மு .க. ஸ்டாலின் அவர்கள் நேற்று 30ம்தேதி பசும்பொன் தேவர் குருபூஜையில் பங்கேற்பதற்காக மதுரையிலிருந்து கார் மூலம் பசும்பொன்னிற்கு புறப்பட்டுச் சென்றார். பசும்பொன் செல்லும் வழியில் சிவகங்கை மாவட்ட தி.மு.க மாவட்ட எல்லையான திருப்புவனம் மின்வாரிய அலுவலகம் முன்பாக மாவட்டக் கழக செயலாளர் கூட்டுறவுத். துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப் பட்டது. முதலாவதாக அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பட்டு வேட்டி கொடுத்து முதல்வரை வரவேற்றார். அதை தொடர்ந்து முன்னாள் அமைச்சர் மூ.தென்னவன், திருமதி தமிழரசிரவிக்குமார் எம். எல். ஏ. மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் ஆ.கணேசன், மாவட்ட துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன் திருமதி ஜோன்ஸ்ரூசோ ஆகியோர் வரவேற்றார்கள். அதை தொடர்ந்து மானாமதுரை புதிய பேருந்து நிலையம் எதிரில் அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ. முன்னிலையில் முதல்வருக்கு உற்சாக வரவேற்புஅளிக்கப் பட்டது .

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப.மதியரசன், எஸ் . மாரியப்பன் கென்னடி, பொதுக்குழு உறுப்பினர்கள் பள்ளத்தூர் கே.எஸ். ரவி, ஏ.ஆர்.ஜெயமூர்த்தி,கு. ராசாங்கம்,பேரூர் கழகச் செயலாளர் நாகூர் கனி, ஒன்றிய கழக செயலாளர்கள் நாகூர்கனி, திருமதி வசந்தி சேங்கைமாறன், கடம்ப சாமி, துரை.ராஜாமணி, எம். அண்ணாதுரை, ஆறு. செல்வராஜன், வே. தமிழ் மாறன், கா.வெங்கட் ராமன், எம். ஜெயராமன், திருமலை முத்து ராமலிங்கம், நாகனிரவி, பூபாலசிங்கம், வே.ஆரோக்கிய சாமி, யோக. கிருஸ்ண குமார், லெ.மு.ரவிச்சந்திரன், நா.நெடுஞ் செழியன்,சுப. சின்னத்துரை, கே.ஆர். ஆனந்த், நகர் கழகச் செயலாளர்கள் க.பொன்னுச்சாமி, சி.எம்.துரை.ஆனந்த், மேயர் எஸ்.முத்துதுரை, துணைமேயர் மாநகர செயலாளர் என். குணசேகரன், பெரி.பாலா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதிலதா அண்ணாதுரை துணைத்தலைவர் முத்துசாமி, நகர்மன்ற துணை தலைவர்கள் பாலசுந்தர், எம். கார்கண்ணன் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது,அமைப்பாளர் சிங்கமுத்து, ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் அண்ணாமலை, சேகர், ஈஸ்வரன், ரவிச்சந்திரன், பாஸ்கரன், மூர்த்தி, இலக்கிய அணி அழகையா, விவசாய அணி காளிமுத்து,வே. கருணாகரன், சுப. தமிழரசன், கு.முருகன் ,அன்புசெல்வம், பன்னீர்செல்வம், ஜாகீர்உசேன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் செல்வராஜ், சேவியர், முன்னாள் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தா.இரா. நெடுஞ்செழியன், மாவட்ட மகளிர்தொண்டரணிதுணை அமைப்பாளர் திலகவதி கண்ணன்,மாவட்ட நெசவாளரணி அமைப்பாளர் எம்.முருகானந்தம், பேரூராட்சி மன்றத்தலைவர் பி.ஏ.நஜ்மூதீன், ஒன்றிய துணைச்செயலாளர் முத்துகுமார் உள்பட பல்வேறு அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டார்கள்.

### டி.பி.எம். மைதீன்கான் தலைமை!

# நெல்லை மத்திய மாவட்டத்தில் மின்னொளி கபடி போட்டி!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - கீதாஜீவன் பங்கேற்பு!

நெல்லை.அக்.31-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கழக இளைஞர் அணி செயலாளர்,துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மத்திய மாவட்டம் மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி ஏற்பாட்டில் வருகிற நவம்பர் 02.11.2024,03.11.2024 ஆகிய நாட்களில் கங்கைகொண்டான் அனைத்தலையூரில் மாநில அளவிலான முதல் ஆண்டு மகளிருக்கான மாபெரும் மின்னொளி கபாடி போட்டி நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில்

முன்னாள் துணை மேயர் முத்துராம லிங்கம்,நெல்லை மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், துணை மேயர் ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பேச்சிபாண்டியன் அரசு வழக்கறிஞர் கந்தசாமி சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் பல்க்குமார்,மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்பழகன், தெற்கு ஒன்றிய செயலாளர் மாரியப்பன் வட்டச் செயலாளர் கண்ணன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பொன்னையா பாண்டியன்,மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான்,மாநகர துணை செயலாளர் மூளிகுளம் பிரபு, ஸ்ரீதுர்க்காம்பிக ப்ளூ மெட்டல் சுபாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.முன்னாள் மாவட்ட துணை செயலாளர் ஆ.க.மணி வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு,சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதாஜீவன் ஆகியோர் பங்கேற்று பரிசுகளை வழங்கி சிறப்பிக்கின்றனர்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மாநில சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா,சட்டமன்ற உறுப்பினர்கள் மு.அப்துல்வகாப் (பாளை) சண்முகையா(ஓட்டப்பிடாரம்) நெல்லை மக்களவை உறுப்பினர் ராபர்ட் புரூஸ்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா,முன்னாள் மாவட்ட செயலாளர் துரை,தீர்மான குழு உறுப்பினர் சுப.சீதாராமன்,மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாநில நெசவாளர் அணி செயலாளர் பெருமாள்,மாவட்ட அவைத்தலைவர் முருகன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தர்மன், சுரேஷ், கிரிஜா குமார், மாநில சட்டத்துறை துணை செயலாளர் ராஜா முகமது, வழக்கறிஞர் அணி அமைப்பா ளர்கள் காமினி தேவன், சுரேஷ்குமார் தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானதிரவியம், நெல்லை தொகுதி பார்வையாளர் முத்துச்செல்வி, நெல்லை கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் கிரகாம்பெல், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன், மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ், நெல்லை மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன்,முன்னாள் மேயர் சரவணன்,ஒன்றிய செயலாளர்கள் தங்கப்பாண்டியன் (பாளை) போர்வெல் கணேசன்(பாளை மத்திய) வேலங்குளம் கண்ணன் (வடக்கு) பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன் (தச்சை)துபாய் சாகுல் (மேலப்பாளையம்) நமச்சிவாயம் (நெல்லை) அண்டன் செல்லத்துரை (பாளை)மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் செல்வலட்சுமி அமிதாப்,

அணி அமைப்பாளர்கள் முகம்மது அலி, வில்சன் மணித்துரை,பலராமன், ராஜேஷ்,அண்ணாதுரை உள்பட மத்திய மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள் சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள், ஊரக, உள்ளாட்சி பிரதிநிதிகள்,ஊராட்சி மன்றத் தலைவர்கள்,ஒன்றியக் கழக நிர்வாகிகள்,உள்பட கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் கீர்த்தி, பிரபா அருள்மணி, சந்திரன்,சித்திரை ஆகியோர் நன்றியுரையாற்றுகின்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை மானூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் சூ.அருள்மணி செய்துள்ளார்.




தருமபுரி மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவப் படத்தினை மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினர். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.மனோகரன், முரசொலி மணி, முகவர் சரவணகுமார், உள்ளிட்ட கழகத்தினர் உள்ளனர்.

# அரியலூர் மாவட்டத்தில் புதிய வழித்தடம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்!

அரியலூர், அக். 31-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க, அரியலூர் மாவட்டம், குன்னம் தொகுதி செந்துறை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சியில் போக்குவரத்துத் துறையின் சார்பில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டலத்தின் சார்பில் முள்ளுக்குறிச்சி - சென்னை புதிய வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்துகொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொதுமக்களின் நலன் கருதி எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், பொதுமக்கள், மகளிர், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், மாணவ, மாணவியர்கள் உள்ளிட்டோர்களுக்கு அரசு பேருந்து சேவை செயல்பட்டு வருகிறது. அந்தவகையில் குன்னம் தொகுதி செந்துறை ஊராட்சி ஒன்றியம், முள்ளுக்குறிச்சியில், முள்ளுக்குறிச்சி சென்னை புதிய வழித்தடத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அதன்படி தடம் எண் 171 வழித்தடத்தின் மூலம் முள்ளுக்குறிச்சியில் இருந்து புறப்பட்டு பாசிகுளம், விருத்தாசலம் வழியாக சென்னை கிளாம்பாக்கத்தைச் சென்றடையும் வகையில் இன்று முதல் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப் பட்டுள்ளது.

தொடர்ந்து, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் செய்தியாளர்களின் சந்திப்பின்போது, தீபாவளி பயணங்களை பொருத்த வரையில் கடந்த ஆண்டு 1,10,000 முன்பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்த ஆண்டில் நேற்று முன்தினம் வரையில் (28.10.2024) 1,42,000 நபர்கள் முன்பதிவு செய்துள்ளனர். முன்பதிவினை பொறுத்த வரையில் அரசு போக்குவரத்துக் கழகங்களில் பயணிக்க கூடிய நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு வருகிறது. முன்பதிவில்லாமல் பயணம் செய்யகூடியவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க கூடும் என்பதால் அதற்கேற்ப வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மட்டும் சுமார் 1,10,750 நபர்கள் சென்னையிலிருந்து சொந்த ஊர்களுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர். நேற்றும் இன்றும் சேர்த்து சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயணங்கள் மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆயுதபூஜை விடுமுறை நாட்களில் ஏற்கனவே சோதனை முறையில் தனியார் ஒப்பந்த பேருந்துகள் இயக்கப்பட்டது. தேவைக்கேற்ப தனியார் ஒப்பந்த பேருந்துகள் அரசு கட்டணத்திலேயே அரசு வழங்குகின்ற பயணசீட்டு கொடுக்கப்பட்டு அரசு நடத்துநர் அந்த வாகனத்தில் பயணிப்பார். அரசு ஒப்பந்த வாகனம் என்ற பெயரோடு அவை இயக்கப்படும். கடந்த ஆண்டை காட்டிலும் தற்போது முன்பதிவு வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் அதற்கேற்ப உயர்த்தப்படும். தனியார் பேருந்துகள் ரெட் பஸ் செயலி மூலமாக அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுவதாக புகார் வரப்பெற்றதை தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அரசின் சார்பில் குழுக்கள் அமைக்கப்பட்டு அனைத்து இடங்களிலும் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். பயணிகளிடமிருந்து புகார் வரப்பெற்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கூடுதல் கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தால் அது பயணிகளுக்கு மீண்டும் வழங்கப்படுவதுடன் தொடர்புடைய வாகனங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். செயலிகள் மூலம் விற்பனை செய்யப்படும் பயணசீட்டுகள் தொடர்பான புகார் வரப்பெற்றால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், விழுப்புரம் மேலாண் இயக்குநர் குணசேகரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழு) லிட், கடலூர் மண்டல பொது மேலாளர் ராகவன், ஒன்றிய கழக செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூர்யிகதிரவன், ஒன்றிய துணை செயலாளர் சிவபிரகாசம், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சித்ரா, தகவல்தொழில் நுட்ப அணி இலக்கியா,

தொ.மு.ச. நிர்வாகிகள் சேகர், பி.வி.அன்பழகன், தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக ஊழியர்கள், மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக தோழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்ட அயோத்தியாப்பட்டணம் தெற்கு ஒன்றியம் சார்பில் ஒன்றிய, பேரூர், மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், பொதுமக்களுக்கு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தாடை மற்றும் இனிப்புகளை கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் ஏ.விஜயகுமார், ஒன்றிய குழு தலைவர் ஹேமலதா விஜயகுமார், சங்கர், கோபால், செல்வராஜ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**குன்றத்தூர் தி.ந. சம்பந்தம்**
**அக்டோபர் 31 (1977)**



செங்கற்பட்டு மாவட்டக் கழகச் செயலாளராகப் பொறுப்பேற்று பணியாற்றியவர்.

கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரது அன்பை பெற்றவர்.

இறுதிமூச்சுவரை கழகப் பணியாற்றிய பகுத்தறிவுப் பண்பாளர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**